# தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை

E01





வீதி அபிவிருத்தி அதிகாரசபை

நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சு

# வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 1. அறிமுகம் | | 01 |
| 2. வரைபடம் | | 02 |
| 3. வீதிக்கு உட்பிரவேசிக்கக் கூடிய இடங்கள் | | 03 |
| • இடைமாற்று இடங்கள் | | |
| I. கொட்டாவ (கொழும்பு - இரத்தினபுரி - வெல்லவாய - மட்டக்களப்பு வீதி) | (A004) | 03 - 05 |
| II. கஹதுடுவ (கொழும்பு - ஹொரணை வீதி) | (B084) | 06 - 07 |
| III. களனிகம (பாணந்துறை - நம்பபான-இரத்தினபுரி வீதி) | (A008) | 08 - 09 |
| IV. தொடங்கொட (நாகொடை - கலவெல்லாவ - பெல்லபிடிய வீதி) | (B304) | 10 - 11 |
| V. வெலிபென்ன (ஹொரணை - அகுருவாதொடை - அளுத்கம வீதி) | (B157) | 12 - 13 |
| VI. குருந்துகஹஹதக்ம (அம்பலன்கொட - அல்பிடிட்ய - பிடிகல வீதி) | (B014) | 14 - 15 |
| VII. பத்தேகம (ஹிக்கடுவ - பத்தேகம - நில்ஹேன வீதி) | (B153) | 16 - 17 |
| VIII. பின்னதுவ (காலி துறைமுகத்திற்கு பிரவேசிக்கும் வீதி) | (B594) | 18 - 19 |
| IX. இமதூவ (காலி, தெனியாய, மாதம்பே வீதியில்) | (A017) | 20 - 21 |
| X. கொக்மடுவ (வெலிகம – கனங்கே வீதி) | (B465) | 22 - 23 |
| XI. கொடகம (மாத்தறை – அக்குரஸ்ஸ வீதியில்) | (A024) | 24 - 25 |

| | | |
|---|---|---|
| 4. | கடுகதி நெடுஞ்சாலையில் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படும் மற்றும் அனுமதிக்கப்படாத வாகனங்களின் வகைகள் | 26 |
| 5. | கட்டணம் செலுத்தும் முறை மற்றும் கட்டண விபரங்கள் | 27 |
| 6. | முதலாவது வகை வாகனங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம் | 28 |
| 7. | இரண்டாவது வகை வாகனங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம் | 29 |
| 8. | மூன்றாவது வகை வாகனங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம் | 30 |
| 9. | நான்காவது வகை வாகனங்களுக்காக செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம் | 31 |
| 10. | கடுகதி நெடுஞ்சாலையை உபயோகிப்பதற்கான அறிவுரைகள் | 32 - 33 |
| 11. | கடுகதி நெடுஞ்சாலைக்கு உட்பிரவேசித்தல் | 34 |
| 12. | கடுகதி நெடுஞ்சாலையில் வாகனங்களை செலுத்துதல் மற்றும் வீதியிலிருந்து வெளியேறுதல் | 35 |
| 13. | அவசர சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் | 36 |
| 14. | கடுகதி நெடுஞ்சாலையினை பாவிக்கும் போது கவனிக்க வேண்டிய மேலும் சில முக்கிய விடயங்கள் | 37 |
| 15. | இடைமாற்று இடங்கள் ஊடாக விரைவாக அடையக்கூடிய வைத்தியசாலை | 38 |
| 16. | இடைமாற்று இடங்களின் அருகில் அமைந்துள்ள பொலீஸ் நிலையங்கள் | 39 |
| 17. | சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள் | 40 |
| 18. | தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள ஒவ்வொரு இடைமாற்றுக்கும் இடையிலான தூரம் | 41 |
| 19. | மாத்தறை மற்றும் காலியிலிருந்து கடுகதி நெடுஞ்சாலைக்கு உட்பிரவேசிக்கும் முறை | 42 -43 |
| 20. | கடுவெல, பெலியகொட மற்றும் அதனை அண்டிய நகரங்களிலிருந்து கடுகதி நெடுஞ்சாலைக்கு உட்பிரவேசிக்கும் முறை | 44 |


**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**



தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை - குருதுகஹஹதக்ம பிரதேசம்

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

**வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்**


# 01. அறிமுகம்

ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு அவசியமான அடிப்படைத் தேவைகளில் வீதி அபிவிருத்தி விசேட இடத்தை கொண்டுள்ளது.கடலோர வீதி (A002) ஊடாக கொழும்பிலிருந்து மாத்தறை வரையான 160 கி.மீ கொண்ட 05 மணித்தியாலத்திற்கும் அதிகமான காலம் செலவாகும். அதிக நெரிசலுடன் கூடிய பாதைக்கு பதிலாக புதிதாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள 126 கி.மீ தூரத்தை கொண்டுள்ள தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலையில் 1 ½ மணித்தியாலமே இப்பயணத்திற்காக தேவைப்படுகின்றது.முதலாவது கட்டமாக, பொது மக்களுக்காக கொட்டாவயிலிருந்து பின்னதுவ வரையான 95.3 கி.மீ பகுதியையும் பின்னதுவயிலிருந்து காலி வரையான காலி துறைமுகத்திற்கு பிரவேசிக்கும் வீதியையும் (B594) பயன்படுத்த முடியும். இரண்டாம் கட்டமாக பின்னதுவயிலிருந்து கொடகம, மாத்தறை வரையான 30.8 கி.மீ. பகுதியும் திறக்கப்படும்.

கொட்டாவையிலிருந்து பின்னதூவ (95.3 கி.மீ.) மற்றும் காலி துறைமுக அடையும் வீதி (5.2 கி.மீ.) வரையான பிரிவு முதல் கட்டமாக பொது மக்களுக்காக திறக்கப்பட்டது. பின்னதூவவில் இருந்து கொடகம, மாத்தறை (30.8 கி.மீ.) வரையான வீதிப் பிரிவு இரண்டாம் கட்டமாக திறக்கப்பட்டது.

இவ் கடுகதி நெடுஞ்சாலையில் பயணம் செய்வதானது பொது மக்களுக்கு சொகுசான பயணம் மற்றும் புதிய அனுபவத்தினையும் பெற்றுத்தரும் என்பது கண்கூடாகும்.அனைத்து வாகனங்களும் ஒரே சீரான வேகத்தில் பயணம் செய்ய முடியும் என்பதால் எரிபொருள் சிக்கனமும்,சக்கரங்கள் மற்றும் நிறுத்தற்கருவிகளின் தேய்மானம் குறைவதும் வாகன உரிமையாளருக்கு மிகவும் பிரயோசனமானதாகும்.தடைகளற்ற பயணம் என்பதால் சாரதிக்கு களைப்பு மற்றும் மன உளைச்சல் என்பன குறைவடையும்.எதிர் திசையில் தடையில்லாமல் வாகனத்தை செலுத்துவதற்கு உகந்த முறையில் கடுகதி நெடுஞ்சாலை நடுவில் பிரிக்கப்பட்டிருத்தல்,முச்சக்கர வண்டி,துவிச்சக்கர வண்டி,உழவு இயந்திரம் போன்ற மெதுவாக பயணிக்கும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளற்ற,அதிக பாரமுடைய வாகனங்களின் இடையூறின்றி வேகமான பயணத்திற்கு இக்கடுகதி நெடுஞ்சாலை உத்தரவாதமளிக்கின்றது.


# தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை (E01)




அவசர அழைப்பு இலக்கம்
**1969**

வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்

# I. கொட்டாவ இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.0.0)




கட்டண நிலையம்


அருகிலுள்ள வைத்தியசாலை

அடுத்த இடைமாற்று
கஹதுடுவ (கி.மீ.5.9)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

# கொட்டாவ இடைமாற்று

கொழும்பு - இரத்தினபுரி-வெல்லவாய - மட்டக்களப்பு வீதியில் **(A004)** கொட்டாவ மற்றும் ஹோமாகம ஆகியவற்றிற்கு இடையில் அமைந்துள்ளது



- கொட்டாவ இடைமாற்றிற்கு அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பேருந்து வண்டி விபரங்கள்
  - ❖ பாதை இல 138 - ஹோமாகம - புறக்கோட்டை
  - ❖ பாதை இல 122 - அவிசாவளை - புறக்கோட்டை ஊடாக இரத்தினபுரி - கொழும்பு
  - ❖ பாதை இல 124 - மீபே - மஹரகமை
  - ❖ பாதை இல 125 - பாதுக்கை - புறக்கோட்டை மற்றும் இங்கிரிய - புறக்கோட்டை
  - ❖ பாதை இல 99 - பதுளை - கொழும்பு

அவசர அழைப்பு இலக்கம்
1969


வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்

- கொட்டாவ அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - ஹோமாகம பொலிஸ் நிலையம்
  - ஸ்ரீ ஜயவர்தனபுர போதனா வைத்தியசாலை
  - மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
  - ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச விளையாட்டு மைதானம்
  - அதுருகிரிய மில்லேனியம் சிட்டி வீட்டு கட்டிடத்தொகுதி
  - ஹோமாகம பொது வைத்தியசாலை
  - மஹரகம புற்றுநோய் வைத்தியசாலை
  - பனாகொட இராணுவ முகாம்
  - மத்தேகொட மற்றும் ருக்மல்கம வீட்டு கட்டிடத் தொகுதி



## II. கஹதுடுவ இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.5.9)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
கொட்டாவ (கி.மீ.5.9)

அடுத்த இடைமாற்று
களனிகம (கி.மீ.7.8)

அவசர அழைப்பு இலக்கம்
1969

வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்

# கஹதுடுவ இடைமாற்று


கொழும்பு - ஹொரணை வீதியில் **(B084)** பொல்கஸ்ஹோவிட மற்றும் கொனபொல நகர்களுக்கிடையில் அமைந்துள்ளது.



- கஹதுடுவ இடைமாற்று அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பேருந்து வண்டி விபரங்கள்
  - ❖ பாதை இலக்கம் 120 - ஹொரணை-கொழும்பு
  - ❖ பாதை இலக்கம் 120 - ஹொரணை-பிலியன்தல
- கஹதுடுவ அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - ❖ கஹதுடுவ பொலிஸ் நிலையம்
  - ❖ வேதர ஆதார வைத்தியசாலை
  - ❖ ஹொரணை ஆதார வைத்தியசாலை

# III. களனிகம இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.13.7)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
கஹதுடுவ (கி.மீ.7.8)

அடுத்த இடைமாற்று
தொடங்கொட (கி.மீ.21.1)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

# களனிகம இடைமாற்று

பாணதுறை-இரத்தினபுரி வீதியில் **(A 008)** பண்டாரகம மற்றும் பொகுணுவிட நகர்களுக்கிடையில் அமைந்துள்ளது.


- கஹதுடுவ இடைமாற்று அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பேருந்து வண்டி விபரங்கள்
  - பாதை இலக்கம் 450 - பாணதுறை - இரத்தினபுரி மற்றும் பாணதுறை - ஹொரணை



- கஹதுடுவ அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - பண்டாரகம பொலிஸ் நிலையம்
  - பண்டாரகம மாவட்ட வைத்தியசாலை
  - ஹொரணை பொது வைத்தியசாலை
  - பாணதுறை ஸ்ரீ சுமங்கல ஆண்கள் / பெண்கள் கல்லூரி
  - ஹொரணை ஸ்ரீபாலி சௌந்தர்ய நிறுவனம்
  - ஹொரணை ஸ்ரீபாலி / தக்ஷிலா கல்லூரி
  - களுத்துறை விகாரை

அவசர அழைப்பு இலக்கம்
**1969**

# IV.தொடங்கொட இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.34.8)




அடுத்த இடைமாற்று
களனிகம (கி.மீ.21.1)

அடுத்த இடைமாற்று
வெலிபென்ன (கி.மீ.11.2)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

**வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்**

# தொடங்கொட இடைமாற்று

நாகொட-மத்துகம வீதியில் **(B 304)** இவ்விரு நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது.


- தொடங்கொட இடைமாற்று அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பேருந்து வண்டி விபரங்கள்
  - ❖ பாதை இலக்கம் 430 - மதுகம - கொழும்பு
  - ❖ பாதை இலக்கம் 430/1 - களுத்துறை - மதுகம



- தொடங்கொட அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - ❖ தொடங்கொட பொலிஸ் நிலையம்
  - ❖ களுத்துறை பொது வைத்தியசாலை
  - ❖ கடுகுருந்த பொலிஸ் பயிற்சி கல்லூரி
  - ❖ குகுலேகங்க நீர் மின் உற்பத்தி நிலையம் மற்றும் விடுமுறை விடுதி
  - ❖ களுத்துறை விகாரை

# V. வெலிபென்ன இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.46.0)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
தொடங்கொட(கி.மீ.11.2)

அடுத்த இடைமாற்று
குருந்துகஹஹதக்ம
(கி.மீ.21.6)

அவசர அழைப்பு இலக்கம்
1969

வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்

# வெலிபேன்ன இடைமாற்று

அளுத்கம - மதுகம வீதியில் **(B 157)** லெவ்வன்துவ பிரதேசத்தில் அமைந்துள்ளது.




- வெலிபேன்ன இடைமாற்று அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பேருந்து வண்டி விபரங்கள்
  - ❖ பாதை இலக்கம் 441 - அளுத்கம-மத்துகம

- வெலிபென்ன அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - ❖ வெலிபென்ன பொலிஸ் நிலையம்
  - ❖ மத்துகம மாவட்ட வைத்தியசாலை
  - ❖ பென்தோட்ட சுற்றுலாப் பிரதேசம்
  - ❖ பென்தர – கலபாத்த ரஜமஹா விஹாரை

# VI. குருந்தகஹஹதக்ம இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.67.6)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
வெலிபென்ன (கி.மீ.21.6)


அடுத்த இடைமாற்று
பத்தேகம (கி.மீ.12.2)

அவசர அழைப்பு இலக்கம்
1969

## குருந்தகஹஹதக்ம இடைமாற்று


அம்பலங்கொட-அல்பிடிய வீதியில் **(B 014)** அல்பிடிய மற்றும் கரன்தெனிய நகரங்களுக்கிடையில் அமைந்துள்ளது.

- குருந்தகஹஹதக்ம இடைமாற்று அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பேருந்து வண்டி விபரங்கள்
  - ❖ பாதை இலக்கம் 996 - அம்பலன்கொட - அல்பிடிய
- பத்தேகம அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - ❖ அல்பிடிய பொலிஸ் நிலையம்
  - ❖ அல்பிடிய மாவட்ட வைத்தியசாலை
  - ❖ பலபிட்டிய பொது வைத்தியசாலை
  - ❖ அம்பலங்கொட தர்மாஷோக / தேவானந்த கல்லூரி



# VII. பத்தேகம இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.79.8)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை





அடுத்த இடைமாற்று
குருந்தகஹஹதக்ம (கி.மீ.12.2)

அடுத்த இடைமாற்று
பின்னதுவ (கி.மீ.15.5)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

# VIII. பின்னதுவ இடைமாற்றின் வரைபடம் (கி.மீ.95.3)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
பத்தேகம (கி.மீ.15.5)

அடுத்த இடைமாற்று
இமதுாவ (கி.மீ.12.2)

அவசர அழைப்பு இலக்கம்
**1969**

# பின்னதுவ இடைமாற்று


காலி-உடுகம வீதியில் **(B 129)** அமைந்துள்ளது.



- பின்னதுவ இடைமாற்று அருகில் சேவையில் ஈடுபட்டுள்ள பிரதான பஸ் வண்டி விபரங்கள்
  - ❖ பாதை இலக்கம் 377 - காலி - உடுகம
- பத்தேகம அருகில் அமைந்துள்ள பிரதான நிறுவனங்கள்
  - ❖ காலி பொலிஸ் நிலையம்
  - ❖ கராபிட்டிய போதனா வைத்தியசாலை
  - ❖ காலி துறைமுகம்
  - ❖ உனவட்டுன கடற்கரை
  - ❖ காலி சர்வதேச கிரிக்கட் மைதானம்

# IX. இமதுாவ இடைமாற்று (கி.மீ.107.5)

| | |
|---|---|
| (பச்சை நிறப் பெட்டி) | கட்டண நிலையம் |
| ✚ | அருகிலுள்ள வைத்தியசாலை |




அடுத்த இடைமாற்று
காலி (கி.மீ. 17.9)

அடுத்த இடைமாற்று
மொடல்துாவ (கி.மீ.7.7)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

வேகமான, பாதுகாப்பான பயணத்திற்காக வீதி சட்டதிட்டங்களை அனுசரித்து வாகனங்களை செலுத்துவோம்

# இமதூவ இடைமாற்று


காலி, தெனியாய, மாதம்பே வீதியில் (A017) அமைந்துள்ளது

- இடைமாற்றிலிருந்து செல்லும் பிரதான பேருந்து சேவைகள்
    - ❖ பாதை இல: 375/2, காலி – அக்குரஸ்ஸ
- பிரதான இடங்கள்/பிரதேச விளக்கங்கள்
    - ❖ பிராந்திய வைத்தியசாலை - இமதூவ
    - ❖ மொடல்தூவ
    - ❖ சுற்றுலா வலயம் - அஹன்கம
    - ❖ திறந்த வர்த்தக வலயம் - கொக்கலை
    - ❖ குடியரசு விமான நிலையம் - கொக்கலை



# X. கொக்மடுவ இடைமாற்று (கி.மீ.115.2)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
இமதூவ (கி.மீ.7.7)

அடுத்த இடைமாற்று
கொடகம (கி.மீ.10.9)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

# கொக்மடுவ இடைமாற்று


வெலிகம கனங்கே வீதி (B 465) இல் அமைந்துள்ளது.

- இடைமாற்றிலிருந்து செல்லும் பிரதான பேரூந்து சேவைகள்
    - ❖ பாதை இல: 370, காலி – வெலிகம - இமதுாவ
- பிரதான இடங்கள்/பிரதேச விளக்கங்கள
    - ❖ பொலிஸ் நிலையம் - வெலிகம
    - ❖ குஸ்ரராஜகல - வெலிகம
    - ❖ சுற்றுலா வலயம் - வெலிகம/மிரிஸ்ஸ
    - ❖ மீனவர் துறைமுகம் - மிரிஸ்ஸ



# XI. கொடகம இடைமாற்று (கி.மீ. 126.1)

கட்டண நிலையம்
அருகிலுள்ள வைத்தியசாலை




அடுத்த இடைமாற்று
கொக்மடுவ (கி.மீ.10.9)

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

# கொடகம இடைமாற்று

மாத்தறை – அக்குரஸ்ஸ வீதியில் (A024) அமைந்துள்ளது

- இடைமாற்றிலிருந்து பிரதான பேருந்து வண்டி பாதை விபரங்கள
  - ❖ பாதை இல. 360/1 – மாத்தறை – அக்குரஸ்ஸ
- பிரதான இடங்கள்/பிரதேச விளக்கங்கள
  - ❖ றுகுணு பல்கலைக்கழகம்
  - ❖ மாத்தறை பொது வைத்தியசாலை
  - ❖ உயன்வத்தை விளையாட்டு மைதானம்
  - ❖ பழைய டச்சு ஆரம்ப கோட்டை
  - ❖ பழைய டச்சு கோட்டை - மாத்தறை



## 04. கடுகதி நெடுஞ்சாலையில் உட்பிரவேசிப்பதற்கு அனுமதிக்கப்படும் மற்றும் அனுமதிக்கப்படாத வாகனங்களின் வகைகள்

**கடுகதி நெடுஞ்சாலையில் பயணம் செய்வதற்கு அனுமதிக்கப்படாத வாகனங்கள்**

- துவிச்சக்கரவண்டி, உழவு இயந்திரம்,முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்கள்
- அனுமதிக்கப்பட்ட அளவுக்கு கூடுதலாக பயணிகள்/பொருட்களை கொண்டுள்ள (Over Loaded) வாகனங்கள்
- மோட்டார் வாகன சட்டமூலத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள உயரம் மற்றும் நீளத்திற்கு புறம்பாக அதிகளவு நீளம் மற்றும் அதிகளவு உயரத்தினைக் கொண்ட வாகனங்கள்
- பழுதான சக்கரங்கள் / இயந்திரத்தைக் (என்ஜின்) கொண்ட, அதிகளவில் புகை வெளியிடும் வாகனங்கள்

**கடுகதி நெடுஞ்சாலையில் பயணம் செய்வதற்கு தகுதியான வாகனங்களில்,**

- நிறுத்தற்கருவிகள் (பிரேக்), சுக்கான் (ஸ்டியரிங்) முறையாக பராமரிக்கப்பட்டும் சரியான முறையில் செயற்படவும் வேண்டும்
- வெளிச்ச விளக்குகள், சமிக்ஞை விளக்குகள் முறையாக இயங்க வேண்டும்
- ஆசனப் பட்டி மற்றும் ஓரக் கண்ணாடிகள் சரியான முறையில் பொருத்தப்பட்டிருக்க வேண்டும்
- வேகத்தினை பிரதிபலிக்கும் வேகமானி மற்றும் குறிப்பிட்ட அளவுமானிகள் சரியான முறையில் இயங்குதல் வேண்டும்
- 100 கி.மீ வேகத்தில் பாதுகாப்பாக பயணிப்பதற்காக மிக முக்கியமாக, சக்கரங்களில் சரியான வாயு அமுக்கம் பேணப்பட்டிருக்க வேண்டும்.

**பாதசாரிகள் கடுகதி நெடுஞ்சாலையில் பிரவேசிப்பதற்கோ அல்லது குறுக்காக பயணம் செய்வதற்கோ அனுமதிக்கப்படமாட்டார்கள்.**

## 05. கட்டணம் செலுத்தும் முறைமை மற்றும் கட்டணம்


- எந்தவொரு இடைமாற்றின் ஊடாகவும் கடுகதி நெடுஞ்சாலைக்கு உட்பிரவேசிக்கும் வாகனம் ஒன்றிற்கு, உட்பிரவேசித்த இடம் மற்றும் வாகனத்தின் வகையை குறிப்பிட்ட பற்றுச்சீட்டு வழங்கப்படும்
- கடுகதி நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறும் சந்தர்ப்பத்தில் உட்பிரவேசிக்கும் போது வழங்கப்பட்ட பற்றுச்சிட்டினை சமர்ப்பித்த பின்னர் பயணத்திற்கான கட்டணம் தீர்மானிக்கப்படும்.
- சரியான கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் பற்றுச்சீட்டு வழங்கப்படும்.
- மேற்கண்டவாறு வசூலிக்கப்படும் கட்டணமானது வீதியின் பராமரிப்பு,அவசர சேவைகள் மற்றும் வைத்திய சேவைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக பயன்படுத்தப்படும்.
- முதல் கட்டமாக கட்டணங்கள் காசாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- 2012 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இலக்ட்ரோனிக் முறையிலான கட்டணம் செலுத்தும் முறையை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.


## 06. முதலாவது வகைக்கு உட்பட்ட வாகனங்கள் கடுகதி நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கு செலுத்த வேண்டிய கட்டண அளவு (ரூபாய்களில்)

இடைமாற்றுக்களுக்கு இடையிலான தூரம்: 6km 8km 21km 11km 22km 12km 16km 12km 8km 10km

| | கொட்டாவ | கஹதடுவ | கலனிகம | தொடங்கொட | வெலிபென்ன | குருந்துகஹஹெதக்ம | பத்தேகம | பின்னதுவ | இமதூவ | கொக்மடுவ | கொடகம |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொட்டாவ | | | | | | | | | | | |
| கஹதடுவ | 100 | | | | | | | | | | |
| கலனிகம | 150 | 100 | | | | | | | | | |
| தொடங்கொட | 200 | 150 | 150 | | | | | | | | |
| வெலிபென்ன | 250 | 200 | 200 | 100 | | | | | | | |
| குருந்துகஹளதக்ம | 300 | 250 | 250 | 150 | 150 | | | | | | |
| பத்தேகம | 350 | 300 | 250 | 200 | 200 | 100 | | | | | |
| பின்னதுவ | 400 | 350 | 300 | 250 | 250 | 150 | 150 | | | | |
| இமதூவ | 450 | 400 | 350 | 300 | 300 | 250 | 200 | 100 | | | |
| கொக்மடுவ | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 | | |
| கொடகம | 550 | 500 | 450 | 400 | 350 | 300 | 250 | 200 | 150 | 100 | |

### வாகன வகைகள்

| | கார் |
|---|---|
|  | அனைத்து விதமான கார்கள் |
|  | அனைத்து விதமான ஜீப்கள் |
|  | அனைத்து விதமான செலுன் ஸ்டேஷன் வேகன |



| | இரட்டை பயன்பாட்டு வாகனம் (Dual Purpose Vehicle) |
|---|---|
|  | அனைத்து விதமான கெப் வண்டிகள்(தனி மற்றும் இரட்டை) |
|  | 09 ஆசனங்கள் வரை கொண்ட அனைத்து வித பயணிகள் போக்குவரத்து வேன் வண்டிகள் |
|  | அண்ணளவாக 3500 கி.கி வரையான பொருட்களை காவிச்செல்லக்கூடிய வேன் மற்றும் டிரக் வண்டிகள் |

## 07. இரண்டாவது வகை வாகனங்கள் கடுகதி நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கு செலுத்த வேண்டிய கட்டண அளவு (ரூபாய்களில்)

இடைமாற்றுக்களுக்கு இடையிலான தூரம்: 6km, 8km, 21km, 11km, 22km, 12km, 16km, 12km, 8km, 10km

| | கொட்டாவ | கஹதடுவ | கலனிகம | தொடங்கொட | வெலிபென்ன | குருந்துகஹஹெதக்ம | பத்தேகம | பின்னதுவ | இமதூவ | கொக்மடுவ | கொடகம |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொட்டாவ | | | | | | | | | | | |
| கஹதடுவ | 200 | | | | | | | | | | |
| கலனிகம | 200 | 200 | | | | | | | | | |
| தொடங்கொட | 400 | 300 | 250 | | | | | | | | |
| வெலிபென்ன | 400 | 350 | 300 | 200 | | | | | | | |
| குருந்துகஹஹெதக்ம | 600 | 500 | 400 | 300 | 250 | | | | | | |
| பத்தேகம | 600 | 600 | 500 | 350 | 300 | 200 | | | | | |
| பின்னதுவ | 700 | 700 | 600 | 450 | 400 | 250 | 200 | | | | |
| இமதூவ | 900 | 850 | 800 | 650 | 550 | 400 | 300 | 150 | | | |
| கொக்மடுவ | 950 | 900 | 850 | 700 | 600 | 450 | 350 | 200 | 150 | | |
| கொடகம | 1050 | 1000 | 950 | 800 | 700 | 500 | 400 | 300 | 200 | 150 | |

### வாகன வகை

| | இலகு ரக மோட்டர் கோச் (Moter Coach) |
|---|---|
|  | 09 ஆசனங்களுக்கு மேல் பயணிகள் போக்குவரத்து வேன்கள் |
|  | 09 முதல் 33 இடையிலான ஆசனங்களை கொண்ட அனைத்து பேருந்து வண்டிகள் |

## 08. மூன்றாவது வகை வாகனங்கள் கடுகதி நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கு செலுத்த வேண்டிய கட்டண அளவு (ரூபாய்களில்)

இடைமாற்றுக்களுக்கு இடையிலான தூரம்

6km 8km 21km 11km 22km 12km 16km 12km 8km 10km

| | கொட்டாவ | கஹதடுவ | கலனிகம | தொடங்கொட | வெலிபென்ன | குருந்துகஹறைதக்ம | பத்தேகம | பின்னதுவ | இமதூவ | கொக்மடுவ | கொடகம |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொட்டாவ | | | | | | | | | | | |
| கஹதடுவ | 250 | | | | | | | | | | |
| கலனிகம | 250 | 250 | | | | | | | | | |
| தொடங்கொட | 500 | 450 | 300 | | | | | | | | |
| வெலிபென்ன | 600 | 550 | 450 | 250 | | | | | | | |
| குருந்துகஹளதக்ம | 900 | 800 | 700 | 500 | 300 | | | | | | |
| பத்தேகம | 1000 | 950 | 850 | 600 | 450 | 250 | | | | | |
| பின்னதுவ | 1300 | 1200 | 1100 | 800 | 650 | 350 | 250 | | | | |
| இமதூவ | 1350 | 1300 | 1200 | 950 | 800 | 550 | 400 | 250 | | | |
| கொக்மடுவ | 1450 | 1350 | 1250 | 1000 | 850 | 600 | 450 | 300 | 250 | | |
| கொடகம | 1600 | 1500 | 1400 | 1150 | 1000 | 750 | 600 | 400 | 300 | 250 | |

### வாகன வகை

**மோட்டார் கோச் (ஆழவநச ஊழயஉா)**



33 அசனங்களுக்கு மேற்பட்ட அனைத்து பேருந்து வண்டிகள்

**இலகுரக மோட்டார் லொரி**



02 அக்செல் (axle) மற்றும் 06 சக்கரங்களைக் கொண்ட லொறி மற்றும் டிரக் வண்டிகள்

**மோட்டார் லொறி**



02 அக்செல் (axle) கொண்ட மோட்டார் லொறி மற்றும் டிரக் வண்டிகள் (அண்ணளவான பாரம் - 17000 கி.கி க்கு அதிகமான)


## 09. நான்காவது வகைக்கு உட்பட்ட வாகனங்கள் கடுகதி நெடுஞ்சாலையில் பயணிப்பதற்கு செலுத்த வேண்டிய கட்டண அளவு (ரூபாய்களில்)

இடைமாற்றுக்களுக்கு இடையிலான தூரம்: 6km, 8km, 21km, 11km, 22km, 12km, 16km, 12km, 8km, 10km

| | கொட்டாவ | கஹதுடுவ | கலனிகம | தொடங்கொட | வெலிபென்ன | குருந்துகஹஹெதக்ம | பத்தேகம | பின்னதுவ | இமதூவ | கொக்மடுவ | கொடகம |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொட்டாவ | | | | | | | | | | | |
| கஹதுடுவ | 300 | | | | | | | | | | |
| கலனிகம | 300 | 300 | | | | | | | | | |
| தொடங்கொட | 700 | 500 | 400 | | | | | | | | |
| வெலிபென்ன | 900 | 700 | 600 | 300 | | | | | | | |
| குருந்துகஹஎதக்ம | 1300 | 1100 | 1000 | 600 | 400 | | | | | | |
| பத்தேகம | 1600 | 1400 | 1200 | 800 | 600 | 300 | | | | | |
| பின்னதுவ | 1700 | 1500 | 1400 | 1200 | 800 | 500 | 300 | | | | |
| இமதூவ | 1800 | 1600 | 1500 | 1100 | 1000 | 650 | 450 | 300 | | | |
| கொக்மடுவ | 1900 | 1700 | 1600 | 1200 | 1100 | 750 | 550 | 350 | 300 | | |
| கொடகம | 2000 | 1800 | 1700 | 1400 | 1200 | 1000 | 750 | 550 | 400 | 300 | |

**வாகன வகை**

**பார மோட்டார் கோச்**



ஒன்றாக இணைக்கப்பட்ட மோட்டார் கோச் இரண்டையுடைய பேரூந்து வண்டிகள்

**பார மோட்டார் லொறி**



04 அக்சல் (axle) அல்லது அதற்கு மேற்பட்ட அனைத்து வண்டிகள்

## 10. கடுகதி நெடுஞ்சாலையை உபயோகிப்பதற்கான ஆலோசனைகள்

- கடுகதி நெடுஞ்சாலையில் விபத்துக்கள் ஏற்படும் அளவை குறைத்துக்கொள்வதற்கு கடுகதி வீதியை வினைத்திறன் மிக்க முறையில் பயன்படுத்துதல் மிகவும் அவசியமாகும்.
- கடுகதி நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்கள் மணித்தியாலத்திற்கு 100 கி.மீ வேகத்தில் பயணிப்பதால் விபத்தொன்றின் போது பயணிகளுக்கு மற்றும் வாகனங்களுக்கு ஏற்படும் நஷ்டம் மற்றும் பாதிப்பானது சாதாரண வீதிகளில் ஏற்படும் விபத்தின் நஷ்டம் மற்றும் பாதிப்பை விட அதிகமானதாகும்
- இரண்டு வாகனங்களுக்கிடையில் ஏற்படும் சிறு மோதல், அவசர நிறுத்தம் அல்லது "U" வடிவாக திரும்புதல், வீதியின் ஓரச்சுவர்களில் அல்லது வீதியின் வேலியில் மோதுதல் என்பன அதிகளவான வாகனங்கள் விபத்துக்குள்ளாவதற்கு காரணமாக அமையலாம்.
- கடுகதி வீதியில் ஏற்படும் வாகனவிபத்தொன்றில் விபத்துக்குள்ளான வாகனத்தை அகற்றுவதற்கு செலவாகும் நேரம் சாதாரண வீதிகளை விட அதிகமானது என்பதால் அவ்வேளையில் ஏற்படும் வாகன நெரிசல் மற்றும் தாமதம் என்பன சாதாரண வீதிகளை விட அதிகமானதாகும்.
- கடுகதி நெடுஞ்சாலையில் பயணிக்கும் மற்றைய வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் வீதி சட்டத்திட்டங்களை அனுசரித்து வாகனத்தை செலுத்துதல் முக்கியமானதாகும்.
- குடிபோதையில், தூக்க கலக்கத்துடன் அல்லது அதிகமான களைப்புடன் கடுகதி நெடுஞ்சாலையில் வாகனங்களை செலுத்துதல் கூடாது.

## கடுகதி நெடுஞ்சாலையை உபயோகிப்பதற்கான ஆலோசனைகள் ......................

- கடுகதி நெடுஞ்சாலையில் உடனடியாக நிறுத்துதல்,பின்னால் செலுத்துதல் அல்லது **"U"** வடிவில் திரும்பி எதிர் திசையில் வாகனத்தை செலுத்துதல் கூடாது.
- பாதையை மாற்ற ஆரம்பிக்க முன் சமிக்ஞை விளக்குகளை ஒளிரவிட்டு மற்றைய வாகனங்களுக்கு இடையூறு ஏற்படா வண்ணம் பாதையை மாற்றுதல் வேண்டும்.

  அதிவேக வீதியில் அவசர சந்தர்ப்பங்களின் போது மட்டுமே நிறுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.
- அவரச சந்தர்ப்பங்களில் அவசர விளக்கை ஒளிரவிட்டு அவசர தரிப்பிட பாதையில் வாகனத்தை முடிந்தளவு வலதுபுறத்தில் நிறுத்துதல் வேண்டும்.
- கடுகதி நெடுஞ்சாலையின் அவசர தரிப்பிடத்தின் அகலம் 1.75 மீற்றர் என்பதால் அத்தரிப்பிட பாதையில் வாகனத்தை நிறுத்தி வாகனத்தின் கதவை திறத்தலானது மற்றைய பயணித்துக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு இடையூறை ஏற்படுத்தலாம்.அதனால் முடிந்தளவு வாகனத்தின் உள்ளேயே இருந்து ஒவ்வெரு 100 மீற்றர் இடைவெளியில் வைக்கப்பட்டுள்ள அல்லது நீங்கள் கடந்து வந்த வீதி சமிக்ஞை பலகை மூலம் நீங்கள் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு உங்கள் தேவையை தொலைபேசி மூலம் 1969 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.
- உங்களுக்கு வாகனத்திலிருந்து கட்டாயமாக இறங்க வேண்டி ஏற்பட்டால் வெளிப்பாதையில் பயணிக்கும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் கதவைத்திறந்து வாகனத்திலிருந்து வெளியேறி அவசர தரிப்பிட பாதையில் காத்திருக்க வேண்டும்.
- கவனக்குறைவாக வாகனத்தின் கதவினை திறத்தலானது பாரிய விபத்தொன்றிற்கு காரணமாக அமையலாம்.

## 11. கடுகதி நெடுஞ்சாலைக்கு உட்பிரவேசித்தல்

- பயணத்தை ஆரம்பிக்கும் முன் கடுகதி நெடுஞ்சாலையில் உட்பிரவேசிக்க வேண்டிய மற்றும் வெளியேற வேண்டிய இடைமாற்றுக்கள் தொடர்பாக தீர்மானிக்க வேண்டும்.அதற்காக கடுகதி நெடுஞ்சாலையின் வரைபடத்தை பயன்படுத்துங்கள்
- பயணத்திற்கு முன்னதாக பயணத்திற்கு தேவையான வாகனத்தின் எரிபொருளின் அளவு போதுமானதா என்பதை பரீட்சித்துக் கொள்ளுங்கள்
- சமிக்ஞை பலகையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை சரியான முறையில் பின்பற்றி செலுத்தவேண்டிய திசைக்குரிய சரியான உட்பிரவேக்கும் பாதையில் பிரவேசித்தல் முக்கியமானதாகும்.
- கட்டண நிலையத்தினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டை கவனமாக வைத்திருப்பதுடன் நெடுஞ்சாலையிலிருந்து வெளி-யேறும் போது அப்பற்றுச்சீட்டை சமர்ப்பிக்க வேண்டும்.
- உட்பிரவேசிக்கும் பாதையில் வாகனத்தை திருப்புதல் மற்றும் பின்னால் செலுத்துதல் கூடாது.
- வெளிப்பாதையில் பயணிக்கும் வாகனங்களுக்கிடையில் தேவையான அளவு இடைவெளி இருப்பின் அவ்வாகனங்களின் வேகத்திற்கு சமமான வேகத்தை பின்பற்றி அவ்வேளையில் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் வெளிப் பாதைக்கு பிரவேசித்தல் வேண்டும்.
- உங்கள் வாகனம் கடுகதி நெடுஞ்சாலைக்கு பிரவேசிக்கும் போது அவ்வேளையில் கடுகதி நெடுஞ்சாலையில் பயணிக்கும் வாகனங்களுக்கிடையில் தேவையான அளவு இடைவெளி இல்லை என நீங்கள் ஊகித்தால் உங்கள் வாகனத்தை நிறுத்தவேண்டி ஏற்படும் என்பதுடன் அது தொடர்பாக விழிப்புடன் செயற்படுங்கள்
- அவ்வாறான சந்தர்ப்பங்களில் மிகவும் அவதானத்துடன் கடுகதி நெடுஞ்சாலையில் வாகனங்கள் வராத சந்தர்ப்பத்தில் கடுகதி நெடுஞ்சாலைக்கு பிரவேசிக்க வேண்டும்.
- வாகனம் கடுகதி நெடுஞ்சாலைக்கு பிரவேசிக்கும் போது விபத்தொன்று ஏற்படின் வாகனத்தை கடுகதி நெடுஞ்சாலைக்கு பிரவேசித்த சாரதி தவறை பொறுப்பேற்க வேண்டும்.

## 12. கடுகதி நெடுஞ்சாலையில் பயணித்தல் மற்றும் வெளியேறுதல்

- கடுகதி நெடுஞ்சாலையின் பாதை மற்றும் சமிக்ஞை அடையாளங்களை சரியான முறையில் பின்பற்ற வேண்டும் என்பதுடன்,வாகனத்தை வெளிப்பாதையில் செலுத்த வேண்டும். வாகனங்களை முந்திச்செல்வதற்கு மட்டுமே உள் ஒழுங்கையை பயன்படுத்த வேண்டும்
- பாதையை மாற்றும் போது மற்றைய வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாத முறையில் செயற்பட வேண்டும்.
- கடுகதி நெடுஞ்சாலையில் அவசர சந்தர்ப்பங்களில் மட்டுமே வாகனத்தை நிறுத்த முடியும் என்பதுடன் வேறு சந்தர்ப்பங்களில் வாகனத்தை நிறுத்துதல் கூடாது.
- உயர்வேகத்தை தக்கவைத்துக்கொள்ளுதல் முக்கியம் என்பதுடன் உயர் வேகம் மணித்தியாலயத்திற்கு 100 கி.மீ ஆகும்.மேலும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் முன்னால் செல்லும் வாகனத்துக்கிடையில் சரியான பாதுகாப்பான இடைவெளியை பேண வேண்டும்.
- மோசமான காலநிலையின் போது மற்றும் இரவு நேரங்களில் வாகனத்தை செலுத்தும் போது சந்தர்ப்பத்துக்கேற்றவாறு வேகத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவும்.

### கடுகதி நெடுஞ்சாலையிலிருந்து வெளியேறுதல்

- இடைமாற்று நுழைவாயிலிலுள்ள கட்டண நிலையத்திலிருந்து வெளியேறும் வாகனங்கள், வெளியேறும் நுழைவாயிலிளிருந்து 500 மீற்றர் குறிப்பிடப்பட்டுள்ள சமிக்ஞை பலகையை கடக்கும் போது வெளிப் பாதையில் இருக்க வேண்டும் என்பதுடன் வாகனத்தை திருப்பும் சமிக்ஞையை ஒளிரவிட்டு பின்னால் வேகமாக வரும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் வாகனத்தை வெளியேறும் பாதைக்கு செல்ல வேண்டும்.
- இடைமாற்று வீதியில் வெளியேறும் பாதையை தவறவிட்டு முன்னால் செல்லுமிடத்து, வாகனத்தை பின்னால் செலுத்துதல், மீண்டும் வாகனத்தை திருப்பி கடுகதி நெடுஞ்சாலையிலோ அல்லது கடுகதி நெடுஞ்சாலைக்கு வாகனங்கள் உட்பிரவேசிக்கும் பாதையிலோ வாகனங்கள் பயணிக்கும் திசைக்கு எதிர்திசையில் பயணிக்கக்கூடாது
- இடைமாற்று வீதியில் வெளியேறும் பாதையை தவறவிட்டால் அடுத்த இடை மாற்று வரை பயணித்து மீண்டும் திரும்பி வர வேண்டும்.

## 13. அவசர சந்தர்ப்பங்களில் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்

- கடுகதி நெடுஞ்சாலையில் பயணிக்கும் போது வாகனத்தில் பழுது அல்லது விபத்து ஏற்படின் வாகனத்தின் அவசர விளக்கை ஒளிரவிட்டு ஏற்கனவே பயணித்துக்கொண்டிருக்கும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் அவசரதரிப்பிடத்தை நோக்கி சென்று ஓரமாக நிறுத்துதல் வேண்டும்.
- நீங்கள் கடந்து வந்த வீதி சமிக்ஞை பலகை மூலமாக நீங்கள் இருக்கும் இடத்தை அறிந்து கொண்டு உங்கள் தேவையை தொலைபேசி மூலம் பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 1969 எனும் இலக்கத்திற்கு தொடர்பு கொண்டு தெரியப்படுத்தவும்.சில நிமிடங்களில் உங்களுக்கான சேவை கிடைக்கப்பெறும்
- முடிந்தளவு வாகனத்தின் உள்ளேயே காத்திருக்க வேண்டும் என்பதுடன் உங்களுக்கு வாகனத்திலிருந்து கட்டாயமாக இறங்க வேண்டி ஏற்பட்டால் வெளிப்பாதையில் பயணிக்கும் வாகனங்களுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் கதவைத்திறந்து வாகனத்திலிருந்து வெளியேறி அவசர தரிப்பிட பாதையில் காத்திருக்க வேண்டும்.
- கவனக்குறைவாக வாகனத்தின் கதவினை திறத்தலானது பாரிய விபத்தொன்றிற்கு காரணமாக அமையலாம்.
- நீங்கள் எச்சந்தர்ப்பத்திலும் வாகனங்கள் பயணிக்கும் பாதைக்கு பிரவேசித்து நடத்தல் கூடாது.வாகனத்தின் அவசர விளக்கு ஒளிரவிடப்பட்டிருத்தல் கட்டாயமானது என்பதுடன் 24 மணித்தியாலங்களும் பொலிஸ்,அவசர விபத்து வண்டி,ஆம்பியூலஸ் வண்டி என்பன தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

## 14. கடுகதி நெடுஞ்சாலையினை பாவிக்கும் போது கவனிக்க வேண்டிய மேலும் சில முக்கியமான விடயங்கள்

01.வாகனத்தை செலுத்தும் போது குப்பைகள் மற்றும் கழிவுப்பொருட்களை வாகனத்திலிருந்து வெளியில் வீசாதீர்கள்.அவ்வாறு செய்தலானது அதிக வேகத்துடன் பயணம் செய்யும் வாகனங்களுக்கு, வீதிக்கு மற்றும் வேறோருவருக்கு ஆபத்தை விளைவிக்கலாம்

02.வாகனத்தில் பயணிக்கும் பயணிகள் எவரும் எச்சந்தர்ப்பத்திலும் வாகனத்தின் ஜன்னல் மூலமாக முகம்,கை,கால்களை வெளியில் இடக்கூடாது.

03.சாரதி மற்றும் முன் பக்க இருக்கையில் பயணம் செய்யும் பயணிகள் மற்றும் சிறுபராயத்தினர் உட்பட அனைத்து பயணிகளும் சரியான முறையில் ஆசனப்பட்டி அணிந்திருத்தல் கட்டாயமானதாகும்.

04.கட்டண நிலையத்தில் செலுத்த வேண்டிய கட்டணத்தை தயாராக வைத்திருப்பதன் மூலம் உங்களது மற்றும் மற்றையவர்களது நேர விரயத்தை தவிர்த்துக்கொள்ள முடியும்.

05.வாகனத்தை செலுத்தும் போது கையடக்க தொலைபேசி பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது என்பதால் சாரதிகள் வாகனத்தை செலுத்தும் போது கையடக்க தொலைபேசி பாவிக்க வேண்டாம். அவசரமான அழைப்போன்றை மேற்கொள்ள வேண்டி ஏற்படின் வாகனத்தில் பயணிக்கும் ஏனைய பயணிகளின் உதவியை நாடவும்.

06.எவராவது ஒருவர் அல்லது ஒரு குழு கடுகதி நெடுஞ்சாலையின் சட்டதிட்டங்களுக்கு உட்படாத வகையில் மற்றும் கடுகதி நெடுஞ்சாலையின் சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும், திருடும் நோக்கோடு செயற்படுவதனை நீங்கள் கண்டீர்களாயின் அது தொடர்பாக உடனடியாக அவசர அழைப்பு (1969) இலக்கத்திற்கு அறியத்தாருங்கள்.

07.அவசர சந்தர்ப்பங்களில் அல்லது விபத்தொன்றின் போது ஏற்கனவே பயணித்துக்கொண்டிருக்கும் வாகனங்களின் உதவியை நாடாமல் அவசர அழைப்பிலக்கத்துக்கு (1969) அழைத்து கடுகதி நெடுஞ்சாலை உத்தியோகத்தர்களின் உடனடி சேவையை பெற்றுக்கொள்ளுங்கள்.

08.கடுகதி நெடுஞ்சாலையில் பயணிக்கும் போது விபத்தொன்றை கண்டீர்களாயின் அது தொடர்பாக அவசர அழைப்பிலக்கத்திற்கு அழைத்து (1969) தெரியப்படுத்துங்கள். அவ்வாறான சந்தர்ப்பங்களில் உங்களது வாகனத்தின் பயணத்திற்கு இடையூறு இல்லாதிருப்பின் வாகனத்தை நிறுத்தாது தொடர்ந்து செலுத்துங்கள்.

09.மிகவும் வினைத்திறனுடைய மற்றும் பாதுகாப்பான பயணத்திற்காக சட்டதிட்டங்களை மதித்து செயற்படுங்கள்.

**அவசர அழைப்பு இலக்கம்**
**1969**

# 15. இடைமாற்றுக்களிலிருந்து விரைவாக அடையக்கூடிய வைத்தியசாலைகள்


| | இடைமாற்று | இடைமாற்றுக்களிலிருந்து விரைவாக அடையக்கூடிய வைத்தியசாலைகள்<br>C - பாரிய விபத்தொன்றின் போது செல்ல வேண்டிய வைத்தியசாலை<br>M - சிறிய விபத்தொன்றின் போது செல்ல வேண்டிய வைத்தியசாலை | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01. | கொட்டாவ | ஸ்ரீ ஜயவர்தனபுர போதனா வைத்திய சாலை (C,M) | 011 277 8610/ 19 |
| | | ஹோமாகம பொது வைத்தியசாலை (C,M) | 011 285 5200 |
| 02. | கஹதுடுவ | ஹோரணை பொது வைத்தியசாலை (C,M) | 034 226 2379/ 034 226 1261 |
| 03. | களனிகம | பண்டாரகம மாவட்ட வைத்தியசாலை (M) | 038 229 0261 |
| | | பாணதுறை பொது வைத்தியசாலை (C,M) | 038 223 2261/ 038 223 1986 |
| | | ஹொரணை பொது வைத்தியசாலை (C,M) | 034 226 2379/ 034 226 1261 |
| 04. | தொடங்கொட | களுத்துறை பெரிய வைத்தியசாலை (C,M) | 034 222 2262 |
| 05. | வெலிபென்ன | மதுகமை மாவட்ட வைத்தியசாலை (M) | 034 224 7261 |
| 06. | குருதுகஹஹதக்ம | பலபிட்டிய பொது வைத்தியசாலை (C,M) | 091 225 8261 |
| | | அல்பிட்டிய பொது வைத்தியசாலை (C,M) | 091 229 1260/ 61 |
| 07. | பத்தேகம | பத்தேகம மாவட்டவைத்தியசாலை (M) | 091 229 2261 |
| 08. | பின்னதுவ | கராபிட்டிய போதனா வைத்தியசாலை (C,M) | 091 223 2267/ 091 223 2176 |
| | | மஹமோதர போதனா வைத்தியசாலை (C,M) | 091 222 2261/ 091 223 4951 |
| 09. | இமதூவ | இமதூவ மாவட்டவைத்தியசாலை (M) | 091 228 6061 |
| 10. | கொக்மடுவ | வெல்கம மாவட்டவைத்தியசாலை (M) | 041 2250 261 |
| 11. | கொடகம | மாத்தறை பெரிய வைத்தியசாலை (C,M) | 041 2227 821 |

# 16. இடைமாற்றுக்களின் அருகில் அமைந்துள்ள பொலிஸ் நிலையங்கள்

| | இடைமாற்று | பொலிஸ் நிலையம் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01. | கொட்டாவ | கொட்டாவ பொலிஸ் நிலையம் | 011 278 2760 |
| | | ஹோமாகம பொலிஸ் நிலையம் | 011 285 5222 |
| 02. | கஹதுடுவ | கஹதுடுவ பொலிஸ் நிலையம் | 011 270 5233 |
| 03. | களனிகம | பண்டாரகம பொலிஸ் நிலையம் | 038 229 0222 |
| 04. | தொடங்கொட | தொடங்கொட பொலிஸ் நிலையம் | 034 228 1622 |
| 05. | வெலிபென்ன | வெலிபென்ன பொலிஸ் நிலையம் | 034 227 4423 |
| 06. | குருந்துகஹஹதக்ம | குருந்துகஹஹதக்ம பொலிஸ் நிலையம் | 091 229 1222 |
| 07. | பத்தேகம | பத்தேகம பொலிஸ் நிலையம் | 091 229 2222 |
| 08. | பின்னதுவ | காலி பொலிஸ் நிலையம் | 091 222 2222 |
| 09. | இமதூவ | இமதூவ பொலிஸ் நிலையம் | 091 3090222 |
| | | அஹன்கம பொலிஸ் நிலையம் | 091 228 3222 |
| 10. | கொக்மடுவ | வெல்கம பொலிஸ் நிலையம் | 041 2250222 |
| 11. | கொடகம | மாத்தறை பொலிஸ் நிலையம் | 041 222 2222-3 |

## 17. சேவை பிரதேசங்களில் பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகள்

- கடுகதி நெடுஞ்சாலையில் தொடங்கொட மற்றும் வெலிபென்ன இடைமாற்றுக்களுக்கிடையில் (கி.மீ.44) இடது மற்றும் வலது பக்கங்களில் ஓய்வு நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- அவற்றில் உணவகம், கழிவறை வசதிகள் மற்றும் ஓய்வு எடுப்பதற்கான வசதிகள் அமைந்துள்ளது.






அடுத்த இடைமாற்று
தொடங்கொட (கி.மீ.9)


அடுத்த இடைமாற்று
வேலிபென்ன (கி.மீ.2)

## 18 தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலையின் ஒவ்வரு இடைமாற்றுக்களுக்கும் இடையிலான தூரம் (கி.மீ)

| | கொட்டாவ | கஹதுடுவ | களனிகம | தொடங்கொட | வெலிபென்ன | குருந்துகஹஹதக்ம | பத்தேகம | பின்னதுவ | இமதூவ | கொக்மடுவ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொட்டாவ | | | | | | | | | | |
| கஹதுடுவ | 5.9 | | | | | | | | | |
| களனிகம | 13.7 | 7.8 | | | | | | | | |
| தொடங்கொட | 34.8 | 28.9 | 21.1 | | | | | | | |
| வெலிபென்ன | 46.0 | 40.1 | 32.2 | 11.2 | | | | | | |
| குருந்துகஹஎதக்ம | 67.6 | 61.7 | 53.9 | 32.8 | 21.6 | | | | | |
| பத்தேகம | 79.8 | 73.9 | 66.1 | 45.0 | 33.8 | 12.2 | | | | |
| பின்னதுவ | 95.3 | 89.4 | 81.6 | 60.5 | 49.5 | 27.7 | 15.5 | | | |
| இமதூவ | 107.5 | 101.6 | 93.8 | 72.7 | 61.5 | 39.9 | 27.7 | 12.2 | | |
| கொக்மடுவ | 115.2 | 109.3 | 101.5 | 80.4 | 69.2 | 47.6 | 35.4 | 19.9 | 7.7 | |
| கொடகம | 126.1 | 120.2 | 112.4 | 91.3 | 80.1 | 58.5 | 46.3 | 30.8 | 18.6 | 10.9 |


## 19. காலியிலிருந்து கடுகதி நெடுஞ்சாலைக்கு பிரவேசிக்கும் முறை

- காலியிலிருந்து **A002** வீதியில் பயணிக்கும் வாகனங்கள் காலி நகரில் சந்திக்கும் 120 கி.மீ கல்லை தாண்டி இடது பக்கமாக திரும்பி காலி உட்பிரவேசிப்பு வீதியில் 5.2 கி.மீற்றர் பயணித்து பின்னதுவ இடைமாற்றின் ஊடாக பிரவேசிக்க முடியும்.



## மாத்தறையிலிருந்து தெற்கு அதிவேக பாதைக்கு பிரவேசித்தல்

மாத்தறை பஸ் நிலையத்திலிருந்து காலியை நோக்கி 2.1 கி.மீ. தூரம் பயணித்து நுபே சந்தியில் வலது பக்கமாக திரும்பி அக்குரஸ்ஸை நோக்கி 4. கி.மி பயணித்து பின்னர் கொடகம இடைமாறும் தளத்தை அடைய முடியும்.



## 20. கடுவெல,பேலியகொட மற்றும் அதனை அண்டிய நகரங்களிலிருந்து கடுகதி நெடுஞ்சாலைக்கு பிரவேசிக்கும் முறை

கடுவெல → மாலபெ → ஹரங்கல → பன்னிபிட்டிய → கொட்டாவ → கொட்டாவ இடைமாற்று

பேலியகொட → பொரளை → பத்தரமுல்லை → பன்னிபிட்டிய → கொட்டாவ → கொட்டாவ இடைமாற்று

தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலையில் முறையான வாகனசட்ட திட்டங்களை செயற்படுத்துவதற்காக விசேட பொலிஸ் சேவை கடுகதி நெடுஞ்சாலையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எப்பொழுதும் உங்களது வாகனம் CCTV கமரா மூலம் அவதானிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## குறிப்புகள்

# தென் இலங்கை கடுகதி நெடுஞ்சாலை

E01

| | | | |
|---|---|---|---|
| A004 | கொழும்பு | கொட்டாவ (கி.மீ. 0+000) | இரத்தினபுரி |
| B084 | கொழும்பு | கஹதுடுவ (கி.மீ. 5+930) | ஹொரணை |
| A008 | பாணந்துறை | களனிகம (கி.மீ. 13+675) | ஹொரணை |
| B304 | நாகொடை | தொடங்கொட (கி.மீ. 34+787) | மத்துகம |
| B157 | அளுத்கம | வெலிபென்ன (கி.மீ. 46+000) | மத்துகம |
| B014 | அம்பலங்கொட | குருந்துகஹஹதக்ம (கி.மீ. 67+575) | எல்பிட்டிய |
| B153 | ஹிக்கடுவ | பத்தேகம (கி.மீ. 79+775) | நில்ஹேன |
| B594 | காலி | பின்னதுவ (கி.மீ. 95+275) | |
| A017 | அகங்கம | இமதூவ (கி.மீ. 107+500) | அக்குரஸ்ஸ |
| B465 | வெலிகம | கொக்மாதுவ (கி.மீ. 115+200) | கனங்கே |
| A024 | மாத்தறை | கொடகம (கி.மீ. 126+100) | அக்குரஸ்ஸ |

வீதி அபிவிருத்தி அதிகாரசபை

Printed by Madhawee Printers (Pvt) Ltd.